## ரூ.35 கோடி ஊழல்!

# விஜயபாஸ்கர் வழக்குகளை அரசு முடக்கக் கூடாது!

## அறப்போர் ஜெயராம் பேட்டி!

சென்னை, ஜூலை 6 –

ரூ.35 கோடி ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய விஜயபாஸ்கர் வழக்குகளை அரசு முடக்கக்கூடாது என அறப்போர் ஜெயராம் தெரிவித்துள்ளார்.

அறப்போர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ஜெயராம் வெங்கடேசன் அளித்த பேட்டி வருமாறு :–

முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மீது பல்வேறு ஊழல் புகார்களைக் கூறி வருகிறீர்கள். அறப்போர் இயக்கத்திடம் இதற்கான ஆதாரங்கள் என்னென்ன உள்ளன? நான் சொல்லக்கூடிய குற்றச்சாட்டுகள் அனைத்துமே புலனாய்வு மற்றும் அரசு அமைப்புகளின் அதிகாரப்பூர்வ ஆவணங்களின் அடிப்படையில் அமைந்தவைதான்; எதுவும் ஆதாரமில்லாதவை அல்ல.

### குட்கா ஊழல்!

குட்கா பொருளைச் சட்டவிரோதமாக விற்பனை செய்ய, ஒரு குறிப்பிட்ட நிறுவனத்திடம் இருந்து மட்டும் மாதந்தோறும் ரூ.14 லட்சம் லஞ்சம் பெற்றதாக அந்த நிறுவனத்தின் உரிமையாளர் மாதவராவ் வருமான வரித்துறையிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். வருமான வரித்துறை சோதனையில் கைப்பற்றப்பட்ட கணக்கு ஆவணங்களிலும் 'HM' (HEALTH MINISTER) என்ற பெயரில் ரூ.14 லட்சம் கொடுக்கப்பட்டதற்கான பதிவுகள் உள்ளன. இந்த வழக்கை விசாரித்த சிபிஐ, அவர் ரூ.3.25 கோடி லஞ்சம் பெற்றுள்ளார் என நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்துள்ளது.

நமது மாநில லஞ்ச ஒழிப்புத் துறை, விஜயபாஸ்கர் மீது வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக ரூ.27 கோடிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது. பின்னர், ரூ.35 கோடி அளவிற்கு அவர் வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து குவித்துள்ளார் என்று நீதிமன்றத்தில் குற்றப்பத்திரி கையும் தாக்கல் செய்துள்ளது. ஆர்.கே. நகர் இடைத்தேர்தல் நிறுத்தப்பட்டதற்கு மிக முக்கிய காரணமே விஜயபாஸ்கர் சம்பந்தப்பட்ட இடங்களில் நடந்த வருமான வரித்துறை சோதனைதான். அப்போது, பல்வேறு அமைச்சர்களுக்கு ரூ.13 கோடி வரை பணத்தை பிரித் துக்கொடுத்ததற்கான பட்டியல் சிக்கியதுடன், ரூ.5 கோடி ரொக்கப் பணமும் பறிமுதல் செய்யப்பட்டது.

### இதுவா அரசியல் பழிவாங்கல்?

ஆனால், இந்த புகார்களை விஜயபாஸ்கர் தரப்பு மறுக்கிறதே?

அவர் மறுக்கலாம், ஆனால் உண்மைகளை மறைக்க முடியாது. குட்கா வழக்கில் மாதவராவ் கொடுத்த வாக்குமூலமும், கைப்பற்றப்பட்ட டைரி குறிப்புகளும் போலியானவை அல்ல. அதிமுக மற்றும் பா.ஜ. கூட்டணியில் இருந்த காலத்திலேயே, ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் சிபிஐ தான் விஜயபாஸ்கர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. வருமான வரித்துறை சோதனையின்போது, அதிகாரிகள் முன்னிலையிலேயே டிரான்ஸ்பர் மற்றும் போஸ்டிங் வாங்குவதற்காகப் பெறப்பட்ட லஞ்சப் பணம்தான் அது என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவை அனைத்தும் அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ ஆவணங்களாக இருக்கும்போது, இதனை எப்படி வெறும் 'அரசியல் பழிவாங்கல்' என்று கூற முடியும்?

விஜயபாஸ்கர் அமைச்சராவதற்கு முன்பே தங்களது குடும்பத்தினர் குவாரி மற்றும் கல் நிறுவனங்கள் போன்ற தொழில்களைச் செய்து வந்ததாகக் கூறுகிறாரே? தொழில் ரீதியாக ஈட்டிய வருவாய்க்கும், நீங்கள் கூறும் சொத்துக்குவிப்பிற்கும் உள்ள சட்டப்பூர்வ வேறுபாட்டை லஞ்ச ஒழிப்புத்துறை நீதிமன்றத்தில் நிரூபிக்க முடியுமா?

இதனை நிரூபிக்க வேண்டியது லஞ்ச ஒழிப்புத்துறையின் கடமை. இது அறப்போர் இயக்கம் தனிப்பட்ட முறையில் தொடர்ந்த வழக்கு அல்ல, அரசு அமைப்பான லஞ்ச ஒழிப்புத்துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகை. விஜயபாஸ்கர் தற்போது தமிழக வெற்றிக் கழகம் கட்சியில் இணைந்துள்ளார். ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் லஞ்ச ஒழிப்புத்துறை, தங்களது சொந்தக் கட்சியின் முக்கிய நிர்வாகிக்கு எதிரான வழக்கை நீதி மன்றத்தில் எப்படிச் சரியாகக் கொண்டு செல்லும்? வழக்கை முடக்குவதற்கோ அல்லது முடித்து வைப்பதற்கோதானே வாய்ப்புகள் அதிகம்?

### தாமதத்திற்கு காரணம் என்ன?

அறப்போர் இயக்கம் இந்த புகார்களை கொடுத்தாலும், லஞ்ச ஒழிப்புத்துறை சோதனைகள் நடத்தினாலும், வழக்குகள் இறுதி நிலையை எட்டாமல் இவ்வளவு தாமதமாவதற்கு என்ன காரணம்?

முன்னாள் அமைச்சர் வேலுமணி வழக்கை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த, நாங்கள் நீதிமன்ற அவமதிப்பு வழக்கிற்கு மேல் வழக்கு தொடர்ந்து, இரண்டாவது முறை நீதிமன்ற அவமதிப்பு வழக்கு போட்ட பிறகுதான் அது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் நிலையை எட்டியது.

பா.ஜ.வை பொறுத்தவரை, ஆரம்பத்தில் அதிரடியாக சோதனை நடத்துவார்கள், ஊடகங்களில் பர பரப்பை ஏற்படுத்துவார்கள். ஆனால், இறுதிவரை வழக்கை நடத்தி தண்டனை வாங்கி தரமாட்டார்கள். அதற்குள் அவர்களுக்கிடையே ஒரு அரசியல் அண்டர்ஸ்டாண்டிங் ஏற்பட்டுவிடும். இந்த அமைப்புகளையும், அரசியல் டீலிங்குகளையும் தாண்டித்தான் மக்களுக்காக நாங்கள் தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. அறப்போர் இயக்கம் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியையோ அல்லது நபர் களையோ மட்டுமே இலக்கு வைத்துச் செயல்படுவதாக ஒரு விமர்சனம் வைக்கப்படுகிறதே? தற்போதைய ஆளுங்கட்சியின் செயல்பாடுகள் குறித்து உங்களது பார்வை என்ன?

### என்ன மாதிரியான மாற்றம் இது!

தற்போது நாங்கள் முன்வைக்கும் விமர்சனமே தற்போதைய ஆளுங்கட்சியின் செயல்பாடுகள் குறித்தது தான். த.வெ.க கட்சி 'நாங்கள் மாற்றத்தைக் கொண்டு வருவோம்', 'கமிஷன் வாங்க மாட்டோம்', 'பார்ட்டி ஃபண்ட் வாங்க மாட்டோம்' என்று கூறி அரசியலுக்கு வந்ததை நாங்கள் வரவேற்றோம். ஆனால், அடுத்த சில நாட்களிலேயே, குட்கா ஊழல் போன்ற வழக்குகளில் சிக்கிய, பார்ட்டி ஃபண்ட் கொடுப்பதில் சிறந்து விளங்கிய விஜயபாஸ்கரை கட்சியில் இணைத்துக் கொள்கிறார்கள். இது என்ன மாதிரியான மாற்றம்? எங்களுடைய நோக்கம் ஊழலற்ற நிர்வாகமே தவிர, எந்தக் குறிப்பிட்ட கட்சியும் அல்ல.

விஜயபாஸ்கர் தவெகவில் இணைந்தது தம் மீதான சொத்துக் குவிப்பு மற்றும் ஊழல் வழக்குகளிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் என்று உறுதியாகக் கூறுகிறீர்களா? அறப்போர் இயக்கத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

ஊழல் வழக்குகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், தங்களது அரசியல் செல்வாக்கைத் தக்கவைத்துக் கொள்ளவும்தான் அவர்கள் கட்சி மாறுகிறார்கள். விஜயபாஸ்கர் விவகாரத்தில், ஏற்கனவே நீதிமன்ற உத்தரவின்படி தான் சிபிஐ குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

எனவே, இதில் பொதுமக்கள் என்ற முறையில் எங்களது நேரடி சட்டப் போராட்டம் தற்போதைக்கு இல்லை என்றாலும், இந்த வழக்குகளை அரசாங்கம் முடக்காமல், தொடர்ந்து நடத்துவதற்கான அழுத்தங்களை நாங்கள் தொடர்ந்து கொடுப்போம். ஒருவேளை வழக்குகளைச் சட்டத்திற்குப் புறம்பாக முடிக்க நினைத்தால், அப்போது எங்களுடைய சட்டரீதியான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவெடுப்போம் என்றார்.

## விபி–ஜி ராம்–ஜி திட்டத்தில் புதுச்சேரியில் 125 நாட்களுக்கு வேலை!

# முதல்வர் ரங்கசாமி பேச்சுக்கு தி.மு.க. கண்டனம்!

## புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா அறிக்கை!



புதுவை, ஜூலை. 6-

விபி-ஜி ராம்-ஜி திட்டத்தில் இனி 125 நாட்கள் கட்டாயமாக வேலை வழங்கப்படும் என்று முதல்வர் ரங்கசாமி தெரிவித்துள்ள கருத்துக்கு திமுக அமைப்பாளர் இரா. சிவா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

100 நாள் வேலை என்ற மகாத்மா காந்தி ஊரக வேலை உறுயளிப்புத் திட்டத்தை 125 நாட்களாக உயர்த்திய VBG RAMG (விகாஸ் பாரத் கிராம வேலைவாய்ப்புத் திட்டம்) என்று புதுப்பெயர் மாற்றம் பெற்ற திட்டத்தை நமது மாண்புமிகு புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி அவர்கள் வில்லியனூரில் துவக்கி வைத்துள்ளார். அதில் பேசும்போது இனி 125 நாட்கள் வேலை கிடைக்கும் என்றும் நாள் கூலியாக ரூ. 347 வழங்கப்படும் என்றும் இதற்காக ஒன்றிய அரசு ரூ. 40 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளதில் ரூ. 14 கோடி மாநில நிதி என்றும் கூறியுள்ளார்.

கடந்த 5 ஆண்டில் இவரது ஆட்சியில் எந்த ஆண்டும் 100 நாள் வேலை முழுமையாக வழங்கப்படவில்லை. சராசரியாக ஆண்டுக்கு 15 நாட்கள் கூட வேலை நடைபெறவில்லை. மொத்த செலவில் 100 சதவீதம் ஒன்றிய அரசு நிதி கொடுத்த பொழுதே 100 நாட்கள் வேலை தராதவர்கள் இன்று 40 சதவீத தொகையை மாநில அரசு ஏற்கும் நிலையில் எப்படி இவர்களால் 125 நாட்கள் வேலைதர இயலும். இவர் ஆட்சி காலத்தில் மட்டுமின்றி திரு. நாராயணசாமி அவர்களின் கடந்த காங்கிரஸ் ஆட்சியின் ஐந்தாண்டு காலத்திலும் இதே அவலம் தான் தொடர்ந்தது.

இத்திட்டத்தில் மாநிலத்தின் நான்கு பிராந்தி யங்களை சேர்ந்த மொத்த வேலை அட்டைதாரர்கள் 75,400 பயனாளிகள் ஆவர். இவர்களுக்கு தலா 125 நாட்களுக்கு ரூ 347 கூலியில் வேலை தர வேண்டும் என்றால் ஆண்டுக்கு ரூ. 327 கோடி தேவைப்படுகிறது. ஆனால் இவர்களின் ஒதுக்கீடோ மொத்தம் ரூ. 40 கோடிதான். அப்படி இருக்க இந்த தொகையில் 125 நாட்கள் வேலை தருவது எப்படி சாத்தியமாகும். வழக்கம்போல் ஆண்டுக்கு 15 நாட்கள் கூட இவர்களால் வேலை தர முடியாது. இதை முழுமையாக உணர்ந்திருக்கின்ற முதல்வர் ரங்கசாமி அவர்கள் 125 நாட்களுக்கு வேலை தருவோம் என்று பேசுவது மக்களை ஏமாற்றுவதாகும்.

ஆகவே, அறிவிப்பு செய்துள்ள 125 நாட்களில் பாதி நாட்களுக்காவது வேலை தரும் விதத்தில் ஒன்றிய அரசை வலியுறுத்தி அதிக நிதியை பெற்று வர முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொகுதி வாரியான சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் இத்திட்டத்திற்கு அதிக நிதியை பெற்றுவர முதல்வரை வலியுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

## பெருமளவு உற்பத்தி செய்பவர்கள் அனைவரும்

# மாசு கட்டுப்பாடு வாரிய இணையத்தில் 15 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டும்!

## சென்னை மாநகராட்சி உத்தரவு!

சென்னை, ஜூலை 6,

சென்னை மாநகராட்சிபகு திகளில் பெருமளவு திடக்க ழிவுகளை உருவாக்குப் வர்கள், திடக்கழிவுகளை அகற்றுவதற்கான வழி காட்டு நெறிமுறைகளை பின்பற்றி திடக்கழிவுகளை வழங்குதல், குப்பை உருவா கும் இடத்திலேயே மக்கும் குப்பை, மக்காத குப்பை உள்ளிட்டவற்றை தனித்த னியே பிரித்து வழங்குதல் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக மேற்கொள்வது குறித்து அலுவலர்களுட னான ஆய்வுக் கூட்டம் மாநகராட்சி ஆணையர் சமீரன் தலைமையில் நேற்று ரிப்பன் மாளிகை கூட்டரங் கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாநகராட்சி ஆணையர் தெரிவித்ததாவது:

திடக்கழிவுமேலாண்மை விதிகள் 2026ன்படி, 20,000 சதுர மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட மொத்த தளப்பரப்பளவு கொண்ட கட்டிடம்; அல்லது தினசரி 40,000 லிட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீர் பயன்பாடு கொண்ட நிறுவனம்; அல்லது தினசரி 100 கிலோ அல்லது அதற்கு மேற்பட்ட திடக்கழிவுகளை உருவாக்கும் நிறுவனம்/ அமைப்பு ஆகிய அளவுகோல்களில் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்யும் நிறுவனங்கள், அமைப்புகள் பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

மேற்கண்ட வரையறையின்படி, நிறுவன அலுவலகங்கள், வணிக நிறுவனங்கள், குடியிருப்பு சங்கங்கள்.

ஓட்டல்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், திருமண மண்ட பங்கள், வணிக வளாகங்கள், சந்தைகள், தொழிற்சாலைகள் மற்றும் இதர பெரிய நிறுவனங்கள் அனைத்தும் பெருமளவு கழிவு உற்பத்தி யாளர்கள் என்ற வகைக்குள் அடங்குகின்றன.

எனவே. திடக்கழிவு மேலாண்மை விதிகள்2026ன் விதிமுறைகளின்படி, சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பெருமளவு கழிவு உற்பத்தி யாளர்களுக்கும் பின்வரும் அறிவுறுத்தல்கள் வழங்கப் படுகின்றன

அனைத்து பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களும், சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் இணையதள இணைப்புகளில் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும்.

தகுதியுடைய அனைத்து பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களும், வருகின்ற 15 நாட்களுக்குள் கட்டாயமாகப் பதிவு செய்துவிட வேண்டும்.

உரிய காலக்கெடுவிற் குள் பதிவு செய்யத் தவறும் பெருமளவு கழிவு உற்பத்தி யாளர்கள் மீது, திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026ன் விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள் ளப்படும்.

திடக்கழிவுமேலாண்மை விதிகள் 2026, பின்பற்ற தவறும் பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களுக்கு குறைந்தபட்சமாக ரூ.5,000 மற்றும் அதிகபட்சமாக ரூ.25,000 வரை அபராதம் விதிக்கப்படும். மேலும், விதி மீறல் தொடரும் பட்சத்தில், நடைமுறையில் உள்ள சட் டங்கள் மற்றும் விதிகளின் படி தேவையான பிற அம லாக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

1.6.2026 5 30.6.2026 வரை திடக்கழிவு மேலாண்மை விதிகளைப் பின்பற்றத் தவறிய 120 பெரும் ளவு கழிவு உருவாக்குபவர்களுக்கு மொத்தம் ரூ.5,95,000 அபராதம் விதிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம், 25.5.2026 ஒன்றில் (6174/2023ல்) வழங்கிய உத்தரவின்படி, திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026னை, மீறுதல் அல்லது வழங்கப்பட்ட உத்தரவுகளை பின்பற்றத் தவறும் பெருமளவு கழிவு உருவாக்குபவர்கள் மீது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய அதிகாரம் வழங்கப்பட்டுள் ளது குறிப்பிடத்தக்கது.

மேலும், பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள், தேவையான வண்ணக் குப்பை தொட்டிகளை தாங்களே கொள்முதல் செய்து, கழிவுகளை தொடக்க நிலை களிலேயே தரம் பிரித்து தங்கள் வளாகத்தின் நுழைவாயிலில் வைத்து, அவற் றைசென்னை மாநகராட்சி அல்லதுசென்னை மாநகராட்சியால் அங்கீகரிக்கப் பட்ட முகமை/நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

பெருமளவு கழிவு உற் பத்தியாளர்கள், தங்களால் உருவாக்கப்படும் உயிரியல் (மக்கும்) கழிவுகளை, தங்கள் வளாகத்திலேயே உரமாக்கல், உயிரி எரிவாயு தயாரித்தல் அல்லது விதிகளில் அங்கீகரிக்கப்பட்ட பிற சுற் றுச்சூழலுக்கு உகந்த முறை கள் மூலம் கட்டாயமாகச் செயலாக்க வேண்டும்.

உலர்கழிவு, சுகாதாரக் கழிவு மற்றும் சிறப்புப் பராமரிப்பு தேவைப்படும் கழிவுகளை, சென்னை மாநகராட்சி அல்லது அத னால் அங்கீகரிக்கப்பட்ட முகமைக்கு ஒப்படைப்பதற்கான உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். கழிவு உருவாக்கம், செயலாக்கம், போக்குவரத்து மற்றும் இறுதி அகற்றல் தொடர்பான பதிவுகளை முறையாகப் பராமரித்து, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அதன் விவரங்களை மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் https://swm. cpcb. gov.in/register > இணைதயள இணைப்பிலும், சென்னை மாநக gecservices.in/bulkwaste/register > வேண்டும்

இணையதள இணைப்பிலும் சமர்ப்பிக்க வேண்டும்.

திருவொற்றியூர் மண்டலம் முதல் சோழிங்கநல்லூர் மண்டலம் வரை உள்ள 15 மண்டல அலுவலர்களால் நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்கள்/ தூய்மை இந்தியா இயக்க பரப்புரையாளர்கள், சுயாதீனப் பொறியாளர்கள் மூலம் பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் இணையதளத்தில் பதிவு செய்வதற்கும் தேவையான தகவல்களைப் பதிவேற்றுவதற்கும் தேவையான உதவிகளை வழங்குவார்கள்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் நிலையான திடக்க ழிவு மேலாண்மையையும் உறுதி செய்யும் வகையில், அனைத்து நிறுவனங்கள். வணிக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் குடியிருப்புச் சங்கங்கள் மேற்கண்ட அறிவுறுத்தல்களை கட்டாயமாகப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இதுதொடர்பான மேலும் விவரங்களுக்கு, சென்னை மாநகராட்சியின் www. chennaicorporation. gov.in, http://www. chennaicorporation.gov.in > என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் பார் வையிட்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், இணை ஆணையர் (சுகாதாரம்) ஸ்ரேயா பி.சிங், காணொலி வாயிலாக வட்டார துணை ஆணையர்கள் கவுஷிக் (மத்தியம்), அதாப் ரசூல், (தெற்கு) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்ட்ரல் — மீனம்பாக்கம்

# மெட்ரோ ரயில் நிலையங்களில் நவீன கழிப்பறைகள்!

சென்னை, ஜூலை. 6-

சென்ட்ரல் மீனம்பாக்கம் மெட்ரோ ரெயில் நிலையங்களில் மேம்படுத்தப்பட்ட நவீன கழிவறைகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுடன் டிஸ்யூ பேப்பர், பைகளை வைப்பதற்கான இடங்கள், சிறந்த வெளிச்சம் மற்றும் காற்றோட்ட வசதிகளும் செய்யப்பட்டுள்ளதால், மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள், குழந்தைகள் மற்றும் அவர்களை அழைத்து வருவோர் உட்பட அனைத்துப் பயணிகளும் முழு பாதுகாப்புடனும், சுகாதாரத்துடனும், வசதியாகவும் இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது!

மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையத்திலும் மேம்படுத்தப்பட்ட நவீன கழிவறைகள் பயணிகள் பயன்பாட்டிற்குத் திறக்கப்பட்டுள்ளன. அங்கு நடைமேடை 2ன் கட்டண பகுதியில் அமைந்துள்ள கழிப்பறை, கூடுதல் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மெட்ரோ பயணிகள் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி, இன்னும் எளிதாகவும் வசதியாகவும் இந்த சுகாதார வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் மீனம்பாக்கம் மெட்ரோ ரயில் நிலையம் ஆகியவற்றில் மேம்படுத்தப்பட்ட இந்த நவீன கழிப்பறை வசதிகள் நேற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுள்ளன.

கழிப்பறை புதுப்பித்தல் திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தின் மற்றொரு பகுதி (ஏ3 நுழைவாயில் அருகே), உயர் நீதிமன்றம் மெட்ரோ, திருமங்கலம் மெட்ரோ மற்றும் சென்னை விமான நிலையம் மெட்ரோ ஆகியவற்றிலும் இதுபோன்ற நவீனப்படுத்தும் பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மேம்படுத்தப்பட்ட இந்த வசதிகள் அனைத்தும் இன்னும் சில மாதங்களில் முழுமையாக நிறைவடைந்து, பயணிகள் பயன்பாட்டிற்காகத் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### உலகத்தரம் வாய்ந்தது!

மெட்ரோ ரயில் கட்டமைப்பு முழுவதும் உலகத்தரம் வாய்ந்த, சுகாதாரமான மற்றும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஏற்ற வசதிகளைத் தொடர்ந்து வழங்குவதில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பில், இந்தத் திட்டம் மற்றுமொரு முக்கிய சான்றாகும், என மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## 'முரசொலி' கணினிப் பிரிவில் பணிபுரியும்

# த.குமரேசன் தந்தை அ.தங்கவேல் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, ஜூலை.6-

'முரசொலி' கணினி பிரிவில் பணிபுரியும் த.குமரேசன் தந்தை அ.தங்கவேல் (வயது 74) அவர்கள் நேற்று முன்தினம் (4.7.2026) காலை 5.30 மணியளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்து கழகத்தினர் மற்றும் குடும்பத்தினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

மறைந்த அ.தங்கவேல் அவர்களுக்கு மனைவி த.ராஜலட்சுமி, மகன் த.குமரேசன், மகள் த.நித்யா ஆகியோர் உள்ளனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் 48/54 தாதா முத்தியப்பன் தெரு சென்னை-600001-ல் இருந்து நேற்று (5.7.2026 ஞாயிற்றுக்கிழமை ) காலை மூலகொத்தலம், மிண்ட். தங்கசாலையில் உள்ள இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது.




கோத்தகிரி சக்திமலை சாலையில் உள்ள சாய் நிவாஸ் ஹாலில் பசுந்து அறக்கட்டளை சார்பாக நடைபெற்ற ஆம்புலன்ஸ் சேவை துவக்க விழாவில் நீலகிரி மாவட்ட பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு கலந்துகொண்டு புதிய ஆம்புலன்ஸ் சேவையை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவங்கி வைத்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. சுகுமார் சுப்பிரமணியன்

**ஜூலை 6 (2020)**



பேரறிஞர் அண்ணா அவர்களுடன் நெருங்கி பழகிய கெங்காதரனின் மகனான இவர், இளமைக்காலம் முதலே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

காஞ்சிபுரம் மாவட்டப் பிரதிநிதி – ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டப் பொருளாளர் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவைத்தலைவர், பொருளாளர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தனது குடும்பத்தில் நடைபெற்ற அனைத்து மண விழாக்களையும் சீர்திருத்தத் திருமணமாக முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் மற்றும் கழகத் தலைவர் ஆகியோரின் தலைமையில் நடத்தியவர். அத்துடன் தனது குடும்பத்தில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் தமிழ்ப் பெயரை சூட்டியவர்.

வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2003ஆம் ஆண்டு தேர்தல் நிதி திரட்டும் பணியில் காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாட்டிலேயே முதல் மாவட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதியை வழங்கியதில் மாவட்டச் செயலாளருடன் இணைந்து மாவட்டப் பொருளாளராக பணியாற்றி பாராட்டைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**